**நியூ பாரத்மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, திருவாரூர்.**

**வகுப்பு : 6** **தமிழ்** **பருவம் : முதல் பருவம்**

**இயல் - ஒன்று** **தமிழ்த்தேன்** **இன்பத்தமிழ்**

**சரியான விடை:**

1. ஏற்றத்தாழ்வற்ற சமூகம் அமைய வேண்டும்
2. நாள் முழுவதும் வேலை செய்து களைந்தவருக்கு அசதி ஆக இருக்கும்
3. நிலவு + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் நிலவென்று
4. தமிழ் + எங்கள் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் தமிழெங்கள்
5. அமுதென்று என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைக்கும் சொல் அமுது + என்று
6. செம்பயிர் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைக்கும் சொல் செம்மை + பயிர்

**பொருத்துக:**

1. விளைவுக்கு – நீர்
2. அறிவுக்கு – தோள்
3. இளமைக்கு – பால்
4. புலவர்க்கு – வேல்

**ஒத்த ஓசையில் முடியும் சொற்களை எடுத்து எழுதுக:**

**எ. கா** : பேர் - நீர் வான் - தேன் பேர் - நேர்

பேர் - ஊர் தோள் - வாள் பால் - வேல்

**குறுவினா** :

1. பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை ?

பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் அமுது, நிலவு, மணம் என்பனவாகும்

2. நீங்கள் தமிழை எதனோடு ஒப்பிடுவீர்கள் ?

நாங்கள் தமிழை உயிரோடு ஒப்பிடுவோம்.

**சிறுவினா** :

1. இன்பத் தமிழ் பாடலில் உங்களுக்குப் பிடித்த அடிகள் இரண்டனை எழுதுக.

தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் - இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!

2. விளைவுக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது ?

விளைச்சலுக்கு நீர் அடிப்படையானது. அது போலவே பயிர் எனும் தமிழ் சமூக வளர்ச்சிக்கு நீர் எனும் தமிழ் அடிப்படையானது.

**சிந்தனை வினா :**

1. வேல் என்பது ஓர் ஆயுதம். தமிழ் ஏன் வேலுடன் ஒப்பிடப்படுகிறது ?

   வேலின் நுனிப்பகுதி கூர்மையாகவும், நடுப்பகுதி அகன்றும், கீழ்ப்பகுதி நீண்டு இருக்கும்.

   அதனைப்போலவே தமிழும் நுட்பமாக அறிவையும் பரந்த சிந்தனையும், ஆழ்ந்தக் கருத்துகளையும் கொண்டது.

**கூடுதல் வினாக்கள்:**

1. நிருமித்த என்னும் சொல்லின் பொருள் <u>உருவாக்கிய.</u>
2. பாரதிதாசனின் இயற்பெயர் <u>சுப்புரத்தினம்.</u>
3. புரட்சிக்கவி எனும் பாவேந்தர் என்றும் போற்றப்படுபவர் <u>பாரதிதாசன்.</u>

**பொருள் கூறுக :**

1. நிருமித்த - உருவாக்கிய
2. சமூகம் - மக்கள் குழு
3. விளைவு - விளைச்சல்
4. அசதி - சோர்வு

**கற்பவை கற்றபின்:**

**1.** தமிழுக்கு நீங்கள் சூட்ட விரும்பும் பெயர்களைப் பட்டியலிடுக.

| | | | |
|---|---|---|---|
| உயிர்த்தமிழ் | இனிமைத்தமிழ் | செந்தமிழ் | தேன்தமிழ் |
| இன்பத்தமிழ் | பைந்தமிழ் | வளர்தமிழ் | முத்தமிழ் |

**கூடுதல் வினாக்கள்** :

1. பாரதிதாசன் குறிப்பு வரைக:

பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம்.பாரதியாரின் கவிதைகள் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தம் பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார்.

2,. பாரதிதாசனுக்கு வழங்கப்பட்ட பட்டங்கள் யாது ?

புரட்சிக்கவி, பாவேந்தர்

**செயல் திட்டம்** :

இன்பத் தமிழ் என்ற பாடலை இனிய ஓசையுடன் பாடுக.

**இயல்: 1 தமிழ்க்கும்மி**

**சொல்லும் பொருளும் :**

1. ஆழிப்பெருக்கு - கடல் கோள்
2. மேதினி - உலகம்
3. ஊழி - நீண்டதொரு காலப் பகுதி
4. உள்ளப்பூட்டு - அறிய விரும்பாமை

**சரியான விடை :**

1. தாய் மொழியில் படித்தால் <u>மேன்மை</u> அடையலாம்.
2. தகவல் தொடர்பு முன்னேற்றத்தால் <u>மேதினி</u> சுருங்கிவிட்டது
3. செந்தமிழ் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   <u>செம்மை + தமிழ்</u>
4. பொய்யகற்றும் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   <u>பொய் + அகற்றும்</u>
5. பாட்டு + இருக்கும் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது

   <u>பாட்டிருக்கும்</u>
6. எட்டு + திசை என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது <u>எட்டுத்திசை</u>

**நயம் உணர்ந்து எழுதுக :**

**பாடல் அடிகளில் முதல் எழுத்து ஒன்று போல் வரும் மோனை சொற்களை எடுத்து எழுதுக:**

1. கொட்டுங்குடி - கோதையரே
2. எட்டு - எட்டிடவே

3. ஊழி - ஊற்றெனும்

4. ஆழி - அழியாமலே

**பாடலின் அடிகளில் இரண்டாம் எழுத்து ஒன்று போல் வரும் (எதுகை) சொற்களை எடுத்து எழுதுக.**

1. கொட்டுங்குடி - எட்டு

2. எட்டுத்திசை - எட்டிடவே

3. ஊழி - ஆழி

4. பொய் - மெய்

**குறு வினா** :

1. தமிழ் மொழியின் செயல்களாகக் கவிஞர் கூறுவன யாவை?

   - பொய்யை அகற்றும்.
   - மனதின் அறியாமையை நீக்கும்.
   - அன்புடைய பலரின் இன்பம் தரும் பாடல்கள் நிறைந்திருக்கும்.
   - உயிர் போன்ற உண்மையை ஊட்டும்.
   - உயர்ந்த அறத்தைத் தரும்.
   - உலகம் சிறந்து வாழ்வதற்கான வழிகளை காட்டும்.

2. செந்தமிழின் புகழ் எங்கெல்லாம் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார் ?

   செந்தமிழின் புகழ் எட்டுத்திசையிலும் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்.

**சிறு வினா** :

1. கால வெள்ளத்தை எதிர்த்து நிற்கும் மொழி தமிழ் என்று கவிஞர் கூறுவதன் காரணம் என்ன ?

தமிழ் மொழி கால வெள்ளத்தை எதிர்த்து நிற்க காரணம் : பல நூறு ஆண்டுகளைக் கொண்டது.அறிவு ஊற்றாகிய நூல்கள் பலவற்றைக் கொண்டது.

2. தமிழ் கும்மி பாடலின் வழி நீங்கள் அறிந்துகொண்டவற்றை உம் சொந்த நடையில் தருக.

- தமிழ் கும்மி பாடலின் வழி நாங்கள் அறிந்துகொண்டவை:
- செந்தமிழின் புகழ் எட்டுத் திசையிலும் பரவ உள்ளது.
- பல நூறு ஆண்டுகளைக் கொண்டது.
- அறிவு ஊற்றாகிய நூல்கள் பலவற்றைக் கொண்டது.
- கடல் சீற்றங்கள் , கால மாற்றங்களால் அழியாமல் நிலைத்திருக்கும்.
- பொய்யை அகற்றும்.
- மனதின் அறியாமையை நீக்கும்.
- அன்புடைய பலரின் இன்பம் தரும் பாடல்கள் நிறைந்திருக்கும்.
- உயிர் போன்ற உண்மையை ஊட்டும்.
- உயர்ந்த அறத்தைத் தரும்
- உலகம் சிறந்து வாழ்வதற்கான வழிகளை காட்டும்.

**சிந்தனை வினா:**

1. தமிழ் மொழி அறியாமையை எவ்வாறு அகற்றும்?

தமிழ் மொழி அறிவு ஊற்றாகிய நூல்கள் பலவற்றைக் கொண்டது. அவை பொய்யை அகற்றி, உண்மையை ஊட்டி அறியாமையை அகற்றும்

**கூடுதல் வினா :**

1. பாவலரேறு என்னும் சிறப்பு பெயர் பெற்றவர்?

பெருஞ்சித்திரனார்

2. பெருஞ்சித்திரனார் இயற் பெயர் <u>மாணிக்கம்</u>.

**குறு வினா :**

1. பெருஞ்சித்திரனார் இயற்றிய நூல்கள் யாவை ?

கனிச்சாறு, கொய்யாகனி, பாவியக்கொத்து, நூறாசிரியம்.

2. பெருஞ்சித்திரனார் இயற்றிய இதழ்கள் யாவை?

தென் மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ் நிலம்

## இயல்: 1 உரைநடை உலகம்

## வளர்தமிழ்

**சரியான விடை:**

1. 'தொன்மை' என்னும் சொல்லின் பொருள் பழமை

2. 'இடப்புறம்' என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல்

   இடது + புறம்

3. 'சீரிளமை' என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல்

   சீர்மை + இளமை

4. சிலம்பு + அதிகாரம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

   சிலப்பதிகாரம்

5. கணினி + தமிழ் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

   கணினித்தமிழ்

6. "தமிழ் மொழி போல் இனியாவது எங்கும் காணோம்" என்று

   பாடியவர் பாரதியார்

7. 'மா' என்னும் சொல்லின் பொருள் விலங்கு.

**கோடிட்ட இடம்:**

1. நாம் சிந்திக்கவும் சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவும் மொழி

2. தமிழில் நமக்கு கிடைத்துள்ள மிகப் பழைமையான இலக்கண நூல்

   தொல்காப்பியம்.

3. மொழியைக் கணினியில் பயன்படுத்த வேண்டும் எனில் அது

   எண்களின் அடிப்படையில் வடிவமைக்கப்பட வேண்டும்.

**சொற்களைச் சொந்த தொடரில் அமைத்து எழுதுக:**

1. **தனிச்சிறப்பு** - தமிழ் இலக்கியங்கள் **தனிச்சிறப்பு** மிக்கவை.

2. **நாள்தோறும்** - திருக்குறளை **நாள்தோறும்** படிக்க வேண்டும்.

**குறு வினா:**

1. தமிழ் மூத்த மொழி எனப்படுவது எதனால்?

   தொல்காப்பியத்திற்கு முன்னதாகவே தமிழில் இலக்கிய நூல்கள் இருந்துள்ளன. இதனைக் கொண்டு தமிழ் மூத்த மொழி என்பதை உணரலாம்.

2. நீங்கள் அறிந்த தமிழ்க் காப்பியங்கள் பெயர்களை எழுதுக.

   சிலப்பதிகாரம்

   மணிமேகலை

   சீவக சிந்தாமணி

   வளையாபதி

   குண்டலகேசி

**சிறு வினா:**

1. அஃறிணை, பாகற்காய் ஆகிய சொற்களின் பொருள் சிறப்பு யாது?

   உயர்திணையின் எதிர்சொல் தாழ்திணை. அதனைத் தாழ்திணை என்று கூறாமல் அஃறிணை என்று பெயர் இட்டனர் நம் முன்னோர். அஃறிணை (அல் + திணை) - உயர்வு அல்லாத திணை

   பாகற்காய் கசப்பு சுவை உடையது. அதனைக் கசப்புக்காய் என்று கூறாமல் இனிப்பு அல்லாத காய் என வழங்கினர்.
   பாகற்காய்(பாகு+ அல் + காய்).

2. தமிழ் இனிய மொழி என்பதற்கான காரணம் தருக.

தமிழ் இனிய மொழி என்பதற்கான காரணம்:

தமிழ் இலக்கியங்கள் இனிமையானவை.

அவை ஓசை இனிமை,பொருள் இனிமை கொண்டவை.

3. தமிழ் மொழியின் சிறப்பு குறித்து ஐந்து வரிகளில் எழுதுக.

- தமிழ் மொழி சிறப்பு மிக்க செம்மொழியாகும்.
- தமிழ் மொழி ஓசை இனிமை,பொருள் இனிமை கொண்டவை.
- தமிழ் மொழி பேசவும், எழுதவும் , படிக்கவும் உகந்த மொழியாகும்.
- தமிழுக்கு முத்தமிழ் என்னும் சிறப்பு பெயர் உண்டு.
- தமிழ் வரிவடிவ எழுத்துக்கள் அறிவியல் தொழில்நுட்ப நோக்கியாக பயன்படுத்தத்தக்கவையாக உள்ளன.

**சிந்தனை வினா:**

1. தமிழ் மொழி படிக்கவும், எழுதவும் எளியது என்பதுபற்றி உங்கள் கருத்து யாது?

உயிர் எழுத்துக்கள் மற்றும் எழுத்துக்களைக் கூட்டி ஒலித்தாலே தமிழ் மொழி படிக்க எளிது.

(எ .கா) அ + மு + து =அமுது

பெரும்பாலான எழுத்துக்கள் வலஞ்சுழி எழுத்துக்களாகவே அமைந்துள்ளதால் தமிழ்மொழி எழுத எளியது

| | | |
|---|---|---|
| ( எ . கா ) வலஞ்சுழி எழுத்துக்கள் | - | அ , எ , ஔ, ண, ஞ |
| இடஞ்சுழி எழுத்துக்கள் | - | ட, ய, ழ |

2. தமிழ் மொழி வளர்மொழி என்பதை உணர்கிறீர்களா? காரணம் தருக.

தமிழ் மொழி வளர்மொழி என உணர காரணம்:

தமிழில் காலந்தோறும் பல வகையான இலக்கிய வடிவங்கள் புதிது புதிதாக உருவாகி வருகின்றன.

தமிழ் தற்போது அறிவியல் தமிழ், கணினித்தமிழ் என்று மேலும் மேலும் வளர்ந்து கொண்டே வருகிறது.

**கூடுதல் வினா:**

**சிறு வினா** :

1. 1 முதல் 10 வரையுள்ள அரபு எண்களை தமிழ் எண்களாக மாற்றுக

| | | |
|---|---|---|
| 1 | - | க |
| 2 | - | உ |
| 3 | - | ங |
| 4 | - | ச |
| 5 | - | ரு |
| 6 | - | சு |
| 7 | - | எ |
| 8 | - | அ |
| 9 | - | சு |
| 10 | - | க0 |

2. பூவின் ஏழு நிலைகள் யாவை ?

அரும்பு , மொட்டு , முகை , மலர் , அலர், வீ , செம்மல் ஆகும்.

## இயல்: 1 கனவு பலித்தது

**கற்பவை கற்றபின்:**

**1.** இக்கடிதத்திற்கு நீங்கள் விரும்பும் வகையில் வேறொரு தலைப்பிடுக

ஜெயிக்க நினை, ஜெயித்திடு

2. உங்கள் எதிர்காலக் கனவு குறித்து ஒரு கடிதம் எழுதுக.

அன்புள்ள சகோதரிக்கு,

நான் நலம். நீங்கள் நலமா ?நான் நூலகத்தில் தமிழ்மொழி படித்த சாதனையாளர்களின் வாழ்க்கை நிகழ்வுகளை அறிந்து கொண்டேன். அதிலிருந்து நானும் தமிழ்வழியில் அறிவியல் பயின்று வருங்காலத்தில் மருத்துவராக வேண்டும் என்பது எனது குறிக்கோள் ஆகும்.

தங்கள் அன்புக்குரிய,

xxxxxxxxxxx

**கோடிட்ட இடம்** :

1. மேனாள் குடியரசுத் தலைவரில் தமிழில் பயின்ற அறிவியல் அறிஞர் மேதகு அப்துல்கலாம்

2. மயில்சாமி அண்ணாதுரை இஷ்ரோவின் தலைவர் ஆவார்.

**வினாக்கள்:**

1. இன்சுவையின் எண்ணம் நிறைவேறக் காரணங்களாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள் ?

இன்சுவை தன் அத்தையின் ஊக்க கடிதங்கள் மூலம் ஐயங்கள் தீர்த்துக் கொண்டாள்.

ஆறாம் வகுப்பிலேயே எதிர்கால இலக்கினை உருவாக்கிக் கொண்டாள்.

அறிவியல் சிந்தனைகளோடு விளங்கியவர்கள்,தமிழர்கள் என அறிந்துக்கொண்டாள்.

தமிழிலும் சாதிக்க முடியும் என்று தெரிந்துக்கொண்டாள்.

2. கனவு பலித்தது என்ற தலைப்பு இக்கடிதத்திற்கு எவ்வாறு பொருந்துகிறது என்பதனை விளக்குக?

இன்சுவை ஆறாம் வகுப்பு பயிலும் போதே வருங்காலத்தில் அறிவியல் துறையில் பணியாற்ற வேண்டும் என்ற கனவை தன் அத்தைக்கு கடிதம் மூலம் எழுதினாள்.

அத்தையின் வழிகாட்டுதலால் அரசுப்பள்ளியில் தமிழ் வழியில் அறிவியல்அறிஞர் ஆகலாம் என்ற கனவு நிறைவேறியது. இன்சுவை தொடர்ந்து முயற்சி செய்து வந்ததால் சதீஸ்வான் விண்வெளி ஆய்வு நிறுவனத்தில் பணியில் சேர முடிந்தது.

**கூடுதல் வினா** :

1. தமிழில் பயின்ற அறிவியல் அறிஞர்கள் யார் ?

   மேனாள் குடியரசுத் தலைவர் மேதகு அப்துல்கலாம்.

   இஸ்ரோ அறிவியல் அறிஞர் மயில்சாமி அண்ணாதுரை

   இஸ்ரோவின் தலைவர் சிவன்

## இயல் : 1 இலக்கணம்

### தமிழ் எழுத்துகளின் வகை தொகை

**குறுவினா:**

1. தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும் ?அவை யாவை ?

தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும். அவை

எழுத்து இலக்கணம்

சொல் இலக்கணம்

பொருள் இலக்கணம்

யாப்பு இலக்கணம்

அணி இலக்கணம்

2. மெய்எழுத்துக்களை மூவகை இனங்களாக வகைப்படுத்தி எழுதுக

மெய்எழுத்துக்களின் மூவகை இனங்கள் :

வல்லினம் (எ.கா) : க், ச், ட், த், ப், ற்

மெல்லினம் (எ.கா) : ங் , ஞ், ண், ந், ம், ன்

இடையினம் (எ.கா) : ய், ர், ல், வ், ழ், ள்

**இயல் இரண்டு: இயற்கை**

**சிலப்பதிகாரம்**

**சொல்லும் பொருளும்**

| | | | |
|---|---|---|---|
| 1. | திங்கள் | - | நிலவு |
| 2. | கொங்கு | - | மகரந்தம் |
| 3. | அலர் | - | மலர்தல் |
| 4. | திகிரி | - | ஆணைச்சக்கரம் |
| 5. | பொற்கோட்டு | - | பொன்மயமான சிகரத்தில் |
| 6. | மேரு | - | இமயமலை |
| 7. | நாம நீர் | - | அச்சம் தரும் கடல் |
| 8. | அளி | - | கருணை |

**சரியான விடை** :

1. கழுத்தில் சூடுவது <u>தார்</u>
2. கதிரவனின் மற்றொரு பெயர் <u>ஞாயிறு</u>
3. வெண்குடை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   <u>வெண்மை + குடை</u>
4. பொற்கோட்டு என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது <u>பொன் + கோட்டு</u>
5. கொங்கு + அலர் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது <u>கொங்கலர்</u>
6. அவன் + அளிபோல் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது

   <u>அவனளிபோல்</u>

**நயம் அறிக** :

**மோனைச் சொற்களை எடுத்து எழுதுக**

**அ**வன் - **அ**ளிபோல்

**எதுகை சொற்களை எடுத்து எழுதுக**

தி**ங்**களை - கொ**ங்**கு

மா**ம**ழை - நா**ம** **நீர்**

**குறுவினா** :

1. சிலப்பதிகாரக் காப்பியம் எவ்வெவற்றை வாழ்த்தி தொடங்குகிறது ?

நிலவின் குளிர்ச்சியையும், கதிரவனின் வெண்மையையும், மழையின் பயனையும் வாழ்த்தி தொடங்குகிறது .

2. இயற்கை போற்றத்தக்கது ஏன் ?

நம்மைச் சுற்றிலும் எங்கு பார்த்தாலும் இயற்கையின் அழகு கொட்டிக் கிடக்கிறது. கடலும், மலையும், கதிரும், நிலவும், மழையும் ,பனியும், நமக்கு பல விதங்களில் பயன்படுகிறது. எனவே இவற்றை போற்றுவோம்.

**சிந்தனை வினா** :

1. இயற்கையைப் போற்றும் வழக்கம் ஏற்படக் காரணமாக எவற்றைக் கருதுகிறீர்கள் ?

நிலம் ,நீர், காற்று , வானம் , நெருப்பு ஆகியவை ஆகியவை இயற்கையின் சக்திகள் ஆதலால் நாம் அவற்றைப் போற்ற வேண்டும்

**கூடுதல் வினா** :

1. சிலப்பதிகாரம் நூற்குறிப்பு வரைக :

சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தை இயற்றியவர்

இளங்கோவடிகள்

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சிலப்பதிகாரம்.

இதுவே தமிழின் முதல் காப்பியம்.

இது முத்தமிழ் காப்பியம், குடிமக்கள் காப்பியம் என்றெல்லாம் போற்றப்படுகிறது.

2. இரட்டைக் காப்பியங்கள் எவை?

சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என்று அழைக்கப்படுகின்றன

**செயல்திட்டம்** :

நிலா என்னும் தலைப்பில் கவிதை படைத்திடுக

**இயல் இரண்டு - காணி நிலம்**

**சொல்லும் பொருளும்**:

1. காணி - நில அளவைக் குறிக்கும் சொல்
2. மாடங்கள் - மாளிகையின் அடுக்குகள்
3. சித்தம் - உள்ளம்

**சரியான விடை** :

1. கிணறு என்பதைக் குறிக்கும் சொல் <u>கேணி</u>
2. சித்தம் என்பதன் பொருள் <u>உள்ளம்</u>
3. மாடங்கள் என்பதன் பொருள் மாளிகையின் <u>அடுக்குகள்</u>
4. நன்மாடங்கள் என்னும் சொல்லை பிரிக்கக் கிடைக்கும் சொல்
   நன்மை + மாடங்கள்
5. நிலத்தினிடையே என்னும் சொல்லை பிரிக்கக் கிடைக்கும் சொல்
   நிலத்தின் + இடையே
6. முத்து + சுடர் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
   முத்துச்சுடர்
7. நிலா + ஒளி என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
   நிலவொளி

**பொருத்துக:**

1. முத்துச்சுடர்போல - நிலா ஒளி

2. தூய நிறத்தில் - மாடங்கள்

3. சித்தம் மகிழ்ந்தி - தென்றல்

**நயம் அறிக :**

**மோனைச் சொற்களை எடுத்து எழுதுக:**

பத்து - பக்கத்தில்

முத்து - முன்பு

**எதுகை சொற்களை எடுத்து எழுதுக:**

கா**ணி** - தூ**ணி**ல்

க**த்**துங் - சி**த்**தம்

**குறு வினா :**

1. காணி நிலம் பாடலின் பாரதியார் வேண்டுவன யாவை ?

தனக்கென காணி அளவு நிலம் வேண்டும். அந்நிலத்தில் அழகிய ஒரு மாளிகை அமைத்துத் தர வேண்டும். மாளிகை பல மாடங்களைக் கொண்டதாய் இருக்க வேண்டும், மாளிகையை தாங்கும் தூண்கள் தூய்மையினால் ஒளிபெற்றுத் திகழ வேண்டும் என்று ஆசிரியர் கூறுகிறார்.

2. பாரதியார் இயற்கையின் மீது கொண்டுள்ள விருப்பம் குறித்து எழுதுக.

வீட்டிற்கு அருகே நீர் நிறைந்த கேணி வேண்டும்.

இளநீரும் கீற்றும் தரும் தென்னை மரங்கள் வேண்டும்

முத்து போன்ற நிலவொளி வீச வேண்டும்.

காதுக்கு இனிய குயிலின் குரலோசை கேட்க வேண்டும்.

உள்ளம் மகிழுமாறு இளந்தென்றல் தவழ வேண்டும்.

**சிந்தனை வினா** :

1. பாரதியார் வீட்டின் அருகில் தென்னை மரங்கள் வேண்டும் என்கிறார். நீங்கள் எந்தெந்த மரங்களை வளர்ப்பீர்கள் என எழுதுக.

வாழை மரம்

கொய்யா மரம்

நெல்லிக்காய் மரம்

**கூடுதல் வினா** :

1. பாரதியாரின் சிறந்த மூன்று நூல்களை எழுதுக ?

பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு , குயில் பாட்டு

2. பாரதியாரின் இயற்பெயர் யாது ?

சுப்பிரமணியன்

3. பாரதி என்னும் பட்டம் யாரால் பாரதியாருக்கு வழங்கப்பட்டது ?

எட்டயபுர மன்னர்

**செயல் திட்டம்** :

என் கனவு இல்லம் என்னும் தலைப்பில் பேசுக

## இயல் : 2 சிறகின் ஓசை

**சரியான விடை** :

1. தட்பவெப்பம் என்னும் சொல்லைப் பிரிக்க கிடைக்கும் சொல்

   தட்பம் + வெப்பம்

2. வேதியுரங்கள் என்னும் சொல்லைப் பிரிக்க கிடைக்கும் சொல்

   வேதி + உரங்கள்

3. தரை + இறங்கும் என்பதை சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

   தரையிறங்கும்

4. வழி + தடம் என்பதை சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

   வழித்தடம்

5. சிட்டுக்குருவி வாழ முடியாத பகுதி துருவப்பகுதி

**கோடிட்ட இடம்**:

1. மிக நீண்ட தொலைவு பறக்கும் பறவை **ஆர்டிக் ஆலா**

2. பறவைகள் வலசை போவதைப் பற்றிப் பாடிய தமிழ்ப்புலவர்

   **சத்தி முத்துப் புலவர்**

3. பறவைகள் இடம்பெயர்வதற்கு வலசைப் போதல் என்று பெயர்

4. இந்தியாவின் பறவை மனிதர் **சலீம் அலி**

5. பறவைகள் வலசை போகக் காரணங்களுள் ஒன்று **தட்பவெப்பநிலை**

**சொற்றொடர் அமைத்து எழுதுக:**

1. **வெளிநாடு**: ரவி தன குடும்பத்தினருடன் வெளிநாடு செல்ல திட்டமிட்டான்.

2. **வாழ்நாள்**: சிட்டுக்குருவியின் வாழ்நாள் பத்து முதல் பதின்மூன்று ஆண்டுகள்

3. **செயற்கை**: செயற்கை உணவுப்பொருட்கள் நமக்கு தீமையாகும்

**பொருத்தமான சொல்லக் கொண்டு நிரப்புக:**

1. மரங்களை வளர்த்து <u>இயற்கையைக்</u> காப்போம்

2. <u>செயற்கை</u> உரங்களைத் தவிர்த்து நிலவளம் காப்போம்

3. வலசைப் பறவைகள் வருகை தமிழகத்தில் <u>மிகுந்துள்ளது</u>

4. தற்போது சிட்டுக்குருவிகள் எண்ணிக்கை <u>குறைந்துள்ளது</u>

**குறுவினா:**

1. பறவைகள் எக்காரணங்களுக்காக இடம் பெயர்கின்றன?

   உணவு, இருப்பிடம், தட்பவெப்பநிலை மாற்றம்,

   இனப்பெருக்கம் இவற்றிற்காகவே பறவைகள் இடம்பெயர்கின்றன.

2. வலசையின்போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் யாவை?

   தலையில் சிறகு வளர்தல்

   சிறகுகளின் நிறம் மாறுதல்

   உடலில் கற்றையாக முடி வளர்தல்

**சிறு வினா** :

1. சிட்டுக் குருவியின் வாழ்க்கை பற்றிச் சிறு குறிப்பு எழுதுக?

- சிட்டுக் குருவி கூடு கட்டி வாழும் பறவையினத்தைச் சார்ந்தது.
- கூடு கட்டும் போது சத்தமிட்டுக் கொண்டே இருக்கும்.
- மூன்று முதல் ஆறு முட்டைகள் வரை இடும்.
- பதினான்கு நாட்கள் அடைகாக்கும்.
- பதினைந்தாம் நாளில் குஞ்சுகள் வெளி வரும்.
- துருவப்பகுதிகள் தவிர மனிதன் வாழும் இடங்களில் எல்லாம் வாழும்

2. வலசைப் பறவைகளின் பயணம் பற்றி நீங்கள் அறிந்தவை யாவை?

- நிலவு, விண்மீன்,புவிஈர்ப்பு புலம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே பறவைகள் இடம் பெயர்கின்றன.
- வடக்கிலிருந்து தெற்கு நோக்கியும்,மேற்கிலிருந்து கிழக்கு நோக்கியும் பறவைகள் வலசை செல்கின்றன.
- பறவைகள் தங்களுக்கென ஒரு வழித்தடத்தைத் தேர்ந்தெடுத்து, அந்தப் பாதையில் தாய் நிலங்களுக்குத் திரும்புகின்றன.
- சில பறவை இனம் போவதற்கும்,வருவதற்கும் இருவேறு பாதைகளைப் பயன்படுத்துகின்றன.

**சிந்தனை வினா:**

1. பறவை இனங்கள் அழியாமல் காப்பாற்றப்பட நாம் செய்ய வேண்டியவை பற்றிச் சிந்தித்து எழுதுக ?

    - ஆல்,அரசு போன்ற மரங்களையும்,அவரை,புடலை போன்ற கொடிகளையும் வளர்க்கலாம்.
    - நமது மண்ணுக்கேற்ற பிற வகை உள்ளூர்த் தாவரங்களையும் வளர்க்கலாம்
    - தோட்டங்களிலும் வயல்வெளிகளிளும் செயற்கை உரங்கள் பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவற்றைத் தெளிப்பதைத் தவிர்க்கலாம்

**கூடுதல் வினா:**

1. உலகிலேயே நெடுந்தொலைவு பயணம் செய்யும் பறவையினம்

    **ஆர்டிக் ஆலா**

2. ஆர்டிக் ஆலா பயணம் செய்யும் தொலைவு **22,000 கி.மீ**

3. பறவை பற்றிய படிப்பு **ஆர்னித்தாலஜி** எனப்படும்

4. உலகச் சிட்டுக் குருவிகள் நாள் **மார்ச் 20**

5. சிட்டுக் குருவியின் வீழ்ச்சி என்ற நூலை எழுதியவர்

    **டாக்டர் சலீம் அலி**

**செயல் திட்டம் :**

உங்கள் பகுதியில் காணப்படும் பறவைகளின் பெயர்களைப் பட்டியலிடுக

## முதலெழுத்தும் சார்பெழுத்தும்

1. முதல் எழுத்துக்கள் என்பவை யாவை ? அவை எதனால் அவ்வாறு அழைக்கப்படுகின்றன?

உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டு, மெய்யெழுத்துக்கள் பதினெட்டு ஆகிய முப்பது எழுத்துக்களும் முதல் எழுத்துக்கள் ஆகும்.

பிற எழுத்துக்கள் தோன்றுவதற்கும், இயங்குவதற்கும் முதற் காரணமாக இவை இருக்கின்றன.எனவே இவை முதல் எழுத்துக்கள் என்பர்.

2. சார்பெழுத்துக்கள் எத்தனை ? அவை யாவை ?

சார்பெழுத்து பத்து வகைப்படும்.

| | |
|---|---|
| உயிர் மெய் | குற்றியலுகரம் |
| ஆய்தம் | ஐகாரக்குறுக்கம் |
| உயிரளபெடை | ஔகாரக்குறுக்கம் |
| ஒற்றளபெடை | மகரக்குறுக்கம் |
| குற்றியலிகரம் | ஆய்தக்குறுக்கம் |

3. சொற்களில் ஆய்த எழுத்து எவ்வாறு இடம்பெறும் ?

தனக்குமுன் ஒரு குறில் எழுத்தையும், தனக்குப் பின் ஒரு வல்லின உயிர் மெய் எழுத்தையும் பெற்றுச் சொல்லின் இடையில் மட்டுமே வரும். தனித்து இயங்காது.

**சிந்தனை வினா:**

1. உயிர்மெய், ஆய்தம் இவை இரண்டும் சார்பு எழுத்துகளாகக் கூறப்படக் காரணம் தருக.

**உயிர் மெய்** :

முதல் எழுத்துகளை சார்ந்து வருவதால் இவை சார்பெழுத்து வகையுள் அடங்கும்.

**ஆய்தம்** :

முதல் எழுத்துகளாகிய உயிரையும்,மெய்யையும் சார்ந்து இயங்குவதால் ஆய்த எழுத்து சார்பெழுத்து ஆகும்

**செயல் திட்டம்** :

முதல் எழுத்துகள் மட்டும் இடம் பெயரும் சொற்களை எழுதுக.

**திருக்குறள்**

1. உயிருள்ள உடல் எது ?

அன்பு இருப்பது தான் உயிருள்ள உடல்.

2. எழுத்துகளுக்கு தொடக்கமாக அமைவது எது?

அகரமே எழுத்துகளுக்கு தொடக்கம்

3. அன்பிலார்,அன்புடையார் செயல்கள் யாவை?

அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளும் எனக்கே என்பார்கள்.அன்பு உடையவர்கள் தம் உடம்பும் பிறர்க்கே என்பார்கள்

## இயல் :3 அறிவியல் தொழில்நுட்பம்

## அறிவியல் ஆத்திச்சூடி

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

1. உடல் நோய்க்கு **ஔடதம்** தேவை

2. நண்பர்களுடன் **ஒருமித்து** விளையாடு

3. கண்டறி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

**கண்டு + அறி**

4. ஓய்வற என்னும் பிரித்து எழுதக் கிடைப்பது **ஓய்வு + அற**

5. ஏன் + என்று என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது **ஏனென்று**

6. ஔடதம் + ஆம் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது

**ஔடதமாம்**

**II. எதிர்ச் சொற்களைப் பொருத்துக**

1. அணுகு - விலகு

2. ஐயம் - தெளிவு

3. ஊக்கம் - சோர்வு

4. உண்மை - பொய்

**பாடல் வரிகளுக்கு ஏற்றவாறு முறைப்படுத்துக :**

1. அறிவியல் சிந்தனை கொள்
2. ஐயம் தெளிந்து சொல்
3. ஏன் என்று கேள்
4. அறிவியலே என்றும் வெல்லும்

**குறுவினா:**

1. மனிதர்களுக்கு மருந்தாக விளங்குவது எது ?

   மனிதர்களுக்கு மருந்தாக விளங்குவது அனுபவம் ஆகும்.

2. பாடலின் கருத்தை உங்கள் சொந்தநடையில் எழுதுக.

   நாம் அறிவியலின் சிந்தனை கொண்டு ஆய்வு செய்ய வேண்டும்.அறிவியலை புரிந்து,ஈடுபாட்டுடன் அணுக வேண்டும்.ஊக்கத்தோடு உண்மையைக் கண்டறிந்து வெற்றி பெற வேண்டும்.

**சிந்தனை வினா:**

1. உங்களுக்கு தெரிந்த மருத்துவ முறைகள் யாவை?

   ஹோமியோபதி

   அலோபதி

   சித்த மருத்துவம்

   ஆயுர்வேதம்

## இயல் 3

## அறிவியலால் ஆள்வோம்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

1. அவன் எப்போதும் உண்மையையே **உரைக்கின்றான்**

2. ஆழக்கடல் என்னும் சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது

**ஆழம் + கடல்**

3. விண்வெளி என்னும் சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது

**விண் + வெளி**

4. நீலம் + வான் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது **நீலவான்**

5. இல்லாது + இயங்கும் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது **இல்லாதியங்கும்**

**II. நயம் அறிக**

1. பாடலில் இடம் பெற்றுள்ள மோனைச் சொற்களை எழுதுக:

**ஆ**ழக் கடல் - **ஆ**ய்வுகள்

**செ**யற்கை - **செ**ய்தித் தொடர்பு

**இ**யற்கை - **இ**ணையம்

2. பாடலில் இடம் பெற்றுள்ள எதுகைச் சொற்களை எழுதுக

இயற்கை - செயற்கை

நீலவான் - நிலவில்

நா**ளை** - வே**ளை**

3. பாடலில் இடம் பெற்றுள்ள இயைபுச் சொற்களை எழுதுக

பார்க்கின்றான்

நினைக்கின்றான்

சிறக்கின்றான்

காக்கின்றான்

**சிறுவினா**

1. செயற்கைக்கோள் எவற்றுக்கு எல்லாம் பயன்படுகிறது?

செயற்கைக் கோள்கள் செய்தித் தொடர்பிலும், புயல், மழை போன்றவற்றை அறிவதற்கும் பயன்படுகிறது.

2. நாளைய மனிதனின் வாழ்வு எவ்வாறு இருக்கும்?

விண்ணிலுள்ள கோள்களில் நகரம் அமைத்தது வாழ்ந்திடுவான். அங்கு தினமும் சென்று வர விண்வெளிப் பாதையும் அமைத்திடுவான்

**சிந்தனை வினா:**

1. எவற்றுக்கு புதிய கண்டுபிடிப்புகள் தேவை என்பது பற்றி சிந்தித்து எழுதுக.

கணிதம்

மருத்துவம்

தொழில்துறை

சமூக பொருளாதாரம் தூய்மையான காற்று கிடைக்க, என பல நிலைகளிலும் பல துறைகளிலும் புதிய கண்டுபிடிப்புகள் தேவை எனலாம்.

2. இதுவரை எத்தனைக் கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன? அவை யாவை?

ரோகினி - 1

ரோகினி - 2

ஆப்பிள்

இன்சாட் - 1 ஏ

ஆர்யபட்டா

ஜி - சாட் - 1 போன்ற எண்ணற்ற செயற்கைக்கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன

3. இந்தியா அண்மையில் நிலவுக்கு அனுப்பிய செயற்கைகோள் எது?

சந்திராயன்

**இயல் 3 உரைநடை உலகம் கணியனின் நண்பன்**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1. நுட்பமாகச் சிந்தித்து அறிவது **அறிவு**

2. தானே இயங்கும் இயந்திரம் **தானியங்கி**

3. நின்றிருந்த என்னும் சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது

   **நின்று + இருந்த**

4. அவ்வுருவம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   **அ + உருவம்**

5. மருத்துவம் + துறை என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது

   **மருத்துவத்துறை**

6. செயல் + இழக்க என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது **செயலிழக்க**

7. நீக்குதல் என்னும் சொல்லின் எதிர்ச்சொல் **சேர்த்தல்**

8. எளிது என்னும் சொல்லின் எதிர்ச்சொல் **அரிது**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. மனிதன் தன் வேலைகளை எளிதாக்க கண்டுபிடித்தவை **எந்திரங்கள்**

2. தானியங்கிகளுக்கும், எந்திரங்களுக்கும் இடையே உள்ள முக்கிய வேறுபாடு **செயற்கை நுண்ணறிவு**

3. உலக சதுரங்க வீரரை வெற்றி கொண்ட மீத்திறன் கணினியின் பெயர் <u>**டீப்புளூ**</u> **( Deep blue )**

4. 'சோபியா' ரோபோவுக்கு குடியுரிமை வழங்கிய நாடு

<u>**சவுதி அரேபியா**</u>

**III. சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக**:

1. தொழிற்சாலை - எங்கள் பகுதியில் உரத்தொழிற்சாலை உள்ளது

2. உற்பத்தி - மக்கள் உள்நாட்டு உற்பத்திப் பொருட்களையே வாங்க வேண்டும்

3. ஆய்வு - விண்வெளியில் ஆய்வு செய்ய வேண்டும்

4. செயற்கை - செயற்கை நுண்ணறிவிற்கு உணர்வுகள் இருக்காது

5. நுண்ணறிவு - நுண்ணறிவுத்திறன் மிக்கவரை 'அறிஞர்' என்பர்

**குறுவினா**

1. ரோபோ என்னும் சொல் எவ்வாறு உருவானது?

காரல் கபெக் என்பவர்' செக்' நாட்டைச் சேர்ந்த நாடக ஆசிரியர்.இவர் எழுதிய நாடகத்தில் ரோபோ என்னும் சொல்லை முதன் முதலாகப் பயன்படுத்தினார்.ரோபோ = அடிமை என்று பொருள் ஆகும்

2. 'டீப் - புளூ' - மீத்திறன் கணினி பற்றி எழுதுக.

டீப் - புளூ என்பது மீத்திறன் கணினி ( Super computer ) ஆகும். இது உலகச் சதுரங்க வெற்றியாளர் கேரி கேஸ்பூரோவ் என்பவரை வெற்றி கொண்டது.

**சிறுவினா:**

1. எந்திர மனிதனின் பயன்களை எழுதுக.

எந்திர மனிதன் பேசும், பாடும், வீட்டு வேலைகளை செய்யும். படிப்பதில் உதவி செய்யும். அலுவலக வேலைகளை முடிக்க உதவும். கணக்கு வழக்குகளையும் முடித்துத் தரும். மருத்துவத் துறையில் நோயின் அறிகுறிகளை கண்டுபிடிக்க உதவும். அறுவை சிகிச்சைகளைச் செய்யும் சில ரோபோக்களும் உள்ளன.

2. துருவப் பகுதிகளில் ஆய்வு செய்ய எந்திர மனிதர்களை அனுப்புவதன் காரணம் யாது?

துருவப் பகுதிகளில் வெப்பநிலை உறைநிலைக்கும் கீழே இருப்பதால் அங்கு ஆய்வு செய்ய எந்திர மனிதர்களை அனுப்புகிறார்கள்.

**சிந்தனை வினா**:

உங்களுக்கென ஒரு எந்திரமனிதன் இருந்தால் அதை எதற்கெல்லாம் பயன்படுத்துவீர்கள் எனச் சிந்தித்து எழுதுக

வீட்டு வேலைகள்

அலுவலக வேலைகள்

சமூகம் சார்ந்த வேலைகள்

பொதுநோக்குடன் செய்யப்படும் வேலைகளுக்கு

பயன்படுத்துவேன்.

## இயல் 3 ஒளி பிறந்தது

1. சுதந்திர இந்தியா அடைந்த வெற்றிகளாக அப்துல்கலாம் எவற்றைக் குறிப்பிடுகிறார்?

- உணவு உற்பத்தியில் தன்னிறைவு
- தகவல் தொழில்நுட்பத் துறையில் மிகுதியான வளர்ச்சி
- அணு உலைகள் மூலம் மின்சாரம் தயாரிப்பதில் முன்னணி
- நவீன மருந்துகளும் பாரம்பரிய மருத்துவ முறைகளும் வளர்ச்சி
- பாதுகாப்புத் துறையில் அக்னி மற்றும் பிருத்திவி ஏவுகணைகளை செலுத்துவதில் வெற்றி.

2. தமக்குப் பெருமகிழ்வு அளித்ததாக அப்துல்கலாம் குறிப்பிடும் நிகழ்வு யாது?

பாதுகாப்புக் கருவிகளில் பயன்படுத்தப்படும் 'கார்பன் இழையை' கொண்டு முந்நூறு கிராம் எடையில் செயற்கைக்கால்கள் உருவாக்கப்பட்டு, போலியோவால் பாதிக்கப்படுவார்கள் பயன் அடைந்ததாகும் என்கிறார்கள்.

**இயல் 3 மொழி முதல், இறுதி எழுத்துக்கள்**

1. மொழி முதலில் வரும் உயிர்மெய் எழுத்துக்கள் யாவை?

- க, ச, த, ந, ப, ம - ஆகிய வரிசைகளில் உள்ள எல்லா உயிர்மெய் எழுத்துக்களும் சொல்லின் முதலில் வரும்.

- ங, ஞ, ய, வ - ஆகிய உயிர்மெய் எழுத்து வரிசைகளில் "ங" மட்டும் முதல் எழுத்தாக வரும்.

- ஞ - வரிசையில் ஞ, ஞா, ஆகிய நான்கு எழுத்துகளும் சொல்லின் முதலில் வரும்.

- ய - வரிசையில் ய, யா, யி, யீ, யு, யூ, யோ, யௌ ஆகிய ஆறு எழுத்துகளும் சொல்லின் முதலில்வரும்.

- வ - வரிசையில் வ, வா, வி, வீ, வெ, வே, வை ஆகிய ஏழு எழுத்துகளும் சொல்லின் முதலில் வரும்

**பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. இராமன் விளைவைக் கண்டறிந்தவர் யார்?

   சர்.சி.வி. இராமன்

2. இராமன் அவர்களுக்கு நோபல் பரிசைப் பெற்றுத் தந்த கேள்வி எது?

   கடல் நீர் ஏன் நீல நிறமாகக் காட்சியளிக்கிறது?

3. தேசிய அறிவியல் நாள் என்றைக்கு கொண்டாடப்படுகிறது? ஏன்?

பிப்ரவரி 28 ஆம் நாள் தேசிய அறிவியல் நாளாக கொண்டாடப்படுகிறது. சர்.சி.வி. இராமன் தமது கண்டுபிடிப்பை வெளியிட்ட நாளாகும்.

**சொல்வளம் பெருக்குக**:

பின்வருவனவற்றுள் அடிக்கோடிட்ட சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதுக.

1. **கணினித்** துறையில் உங்கள் அறிவை வளர்த்து கொள்ளுங்கள்.
2. **அழைப்புமணியை** அழுத்தினான் கணியன்.
3. மனிதர்கள் தங்கள் வேலைகளை எளிதாக்க **எந்திரங்களைக்** கண்டுபிடித்தனர்
4. இன்று பல்வேறு துறைகளிலும் **எந்திரமனிதன்** பயன்பாட்டிற்கு வந்துள்ளது.